# இயல் 7.3 - இயற்கணிதம்

பயிற்சி எண் :: 7.3.5.2.B

இயற்கணிதம் (Algebra) - அசமன்பாடுகளைத் தீர்க்கும் விதிகள்

Algebra - Solving Inequalities - Rules

## இயற்கணிதம் (Algebra) - அசமன்பாடுகளைத் தீர்க்கும் விதிகள்

### விதி 1:

ஒரு அசமன்பாட்டின் இருபுறமும் ஒரே எண்ணைக் கூட்டுவதாலோ அல்லது கழிப்பதாலோ அதன் **அசமத்தன்மை** மாறுவதில்லை. உதாரணமாக,

$6 < 8$

(இருபுறமும் 4 - ஆல் கூட்ட)

$6 + 4 < 8 + 4$

$10 < 12$

$9 > 5$

(இருபுறமும் 3 - ஐக் கழிக்க)

$9 - 3 > 5 - 3$

$6 > 2$

மேற்கண்ட உதாரணங்களில் இருந்து **விதி - 1** நிரூபணமாகிறது.

### விதி 2:

ஒரு அசமன்பாட்டின் இருபுறமும் ஒரே மிகை எண்ணால் பெருக்குவதாலோ அல்லது வகுப்பதாலோ அதன் **அசமத்தன்மை** மாறாது. ஆனால், குறை எண்ணால் பெருக்கினாலோ அல்லது வகுத்தாலோ **அசமன்பாட்டின் குறி** மாறுபடும். உதாரணமாக,

$12 > 8$

(இருபுறமும் 2 - ஆல் பெருக்க)

$12 \times 2 > 8 \times 2$

$24 > 16$

அசமன்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை

$12 > 8$

(இருபுறமும் (-2) - ஆல் பெருக்க)

$12 \times -2 > 8 \times -2$

$-24 > -16$ ✗

$-24 < -16$ ✓

அசமன்பாட்டுக்குறி மாறுகிறது

$3 < 9$

(இருபுறமும் 3 - ஆல் வகுக்க)

$\frac{3}{3} < \frac{9}{3}$

$1 < 3$

அசமன்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை

$3 < 9$

(இருபுறமும் (-3) - ஆல் வகுக்க)

$\frac{3}{-3} < \frac{9}{-3}$

$-1 < -3$ ✗

$-1 > -3$ ✓

அசமன்பாட்டுக்குறி மாறுகிறது

மேற்கண்ட உதாரணங்களில் இருந்து **விதி - 2** நிரூபணமாகிறது.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/ggDdQLgByGY


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 7th October, 2022 :: 10:18 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**